20th March 1959]

Wage Board for Plantation Industry

* 916-G *Q.*—Sri K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the views of the Government were called for by the Central Government to constitute a Wage Board for Plantation Industry on an All-India basis; and

(*b*) if so, the views expressed by the Government on the question of wages for workers in this industry?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) This Government did not support the idea of constituting an All-India Wage Board for Plantation Industry.

Community Development Blocks

* 916-H *Q.*—Sri K. RAMACHANDRAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the principles under which areas are selected to form Community Blocks; and

(*b*) whether resosutions of Planning Boards in this matter are taken into consideration?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) The following principles are kept in view :

(1) It should contribute to rapid increase of agricultural production.

(2) The area should lie in and around Training Centres.

(3) Re-arrangements of existing Blocks which are unwieldy and which cut across taluk boundaries.

(4) New areas selected should as far as possible be contiguous to old blocks.

(5) The special needs of backward areas, to be kept in view.

(6) The interest evinced by the people in self-reliance and self-help.

(*b*) Yes, Sir.

Sri A. GOVINDASAMY : இந்த பிளாக்குகள் தேர்ந்தெடுக்கப்படுகின்ற நேரத்தில் உற்பத்தி பெருக்கம் அதிகமாக இருக்கக்கூடிய இடங்கள் முதலில் எடுக்கப்படுவதாகச் சொல்லப்பட்டது. பிற்பட்ட பகுதிகளும் பிளாக்குகளுக்கு தேர்ந்தெடுக்கப்படுவதாகவும் சொல்லப்பட்டது. இப்படி பார்க்கும்பொழுது ஒரு காரணம் இருந்தாலும் மற்றொரு காரணம் இல்லாமல் இருக்கின்ற நிலைமை ஏற்படுவதினால், ஏதாவது ஒரு குறிப்பிட்ட காரணம் பொருந்தினாலும், அதை வைத்துக்கொண்டு அந்தப் பிரதேசத்தை பிளாக்காக தேர்ந்தெடுக்க அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : ஒரு காரணம் இல்லாவிட்டால், ஏதாவது மற்றொரு காரணம் பொருந்தும். இப்பொழுது இருக்கக்கூடிய நிலைமையில் எதற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமோ, அதற்கு

முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. உதாரணமாக உணவு உற்பத்தியை எந்த இடத்தில் அதிகப்படுத்த முடியுமோ, அந்த இடத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. அதே போல் மற்ற இடங்களையும் சேர்ப்பதற்கு முயற்சி செய்யப்படுகிறது.

SRI S. NAGARAJA MONIGAR : இந்த வட்டாரங்களை தேர்ந்தெடுக்கும்பொழுது ஜனத்தொகையை மாத்திரம் ஆதாரமாகக்கொண்டு சுமார் 60,000 ஜனத் தொகை இருக்கும் பிரதேசங்கள் ஒரு பிளாக்காக தேர்ந்தெடுக்கப்படுகிறது. எற்கெனவே பின்தங்கிய பிரதேசங்கள் ஜனத்தொகை குறைவாகவும் விஸ்தீரணம் அதிகமாகவும் இருப்பதால் வேண்டிய அபிவிருத்தி போட்டு முதலானது போட முடியாமல் போகிறது. ஆகவே, விஸ்தீரணத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த பிளாக்குகள் எடுக்கப்படுமா என்று கேட்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: இப்பொழுது எறக்குறைய 60,000 ஜனத்தொகை அடிப்படையிலே, கொஞ்சம் அதிகமாக முன்னேற்றம் உள்ள இடங்களில் 60,000 ஜனத்தொகைக்கு மேலும் எடுக்கப்படுகிறது. 60,000 என்று சொல்லும்பொழுது பிற்பட்ட பகுதியிலே 60,000-க்கு மேல் போகாமல் பார்த்துக்கொண்டால் போதும்.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : பிளாக்குகள் எற்படுத்துகிற காலத்தில் சேலம் ஜில்லாவில் ஒரு லட்சம் ஜனத்தொகை உள்ள பிளாக்குகள் இருக்கின்றன. 30,000 ஜனத்தொகை உள்ள பிளாக்குகளும் இருக்கின்றன. அதிகமாக ஒரு லட்சம் ஜனத்தொகை இருக்கக் கூடிய பிளாக்கில் உள்ள எரியாவை, குறைவாக 30,000 ஜனத்தொகை உள்ள பிளாக்கோடு சேர்த்து, இரண்டும் சமமான முறையில் அபிவிருத்தி அடையும்படி எற்பாடு செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : 30,000 ஜனத்தொகை உள்ள பிளாக்குகள் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. சில இடங்களில் ஒரு லட்சம் ஜனத் தொகைக்கு மேல் இருக்கக்கூடிய பிளாக்குகளை இரண்டாக பிரிப்பதற்கு இப்பொழுது முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. அம்மாதிரி பல பிளாக்குகள் பிரிக்கப்பட்டும் இருக்கின்றன.

SRI A. GOVINDASWAMY : இந்த பிளாக்குகள் தேர்ந்தெடுப்பதிலே ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள பிளானிங் போர்டு உறுப்பினர்களும், அந்த மாவட்டத்தைச் சேர்ந்த கலெக்டர் அவர்களும் கூடி முடிவு செய்து அனுப்புகிறார்களே, அந்த முடிவைத்தான் அரசாங்கம் எற்றுக்கொள்வது என்ற கொள்கை கையாளப்படுகிறதா ? அல்லது அவர்கள் சிபார்சை புறக்கணித்துவிட்டு, புதிய பிளாக்குகள் இங்கிருந்து தேர்ந்தெடுத்து அனுப்பப்படுகிறதா ? அப்படியானால் அது நியாயமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அநேகமாக பல இடங்களில் அவர்களின் சிபார்சுகள் எற்றுக்கொள்ளப்படுகின்றன. ஆனால் சில சமயங்களில் இந்த சிபார்சுகள் செய்வதிலே அரசியல் புகுந்துவிடுவதன் காரணத்தினால், சிபார்சாக அல்லாமல் லாட்டரி சீட்டு போட்டுக்கூட முடிவெடுத்து அனுப்பினால், அதை எற்றுக்கொள்ளவேண்டுமென்ற அவசியம் இல்லை.

SRI K. RAMACHANDRAN : இந்தப் பிரதேசங்களை தேர்ந்தெடுப்பதற்கு பல அடிப்படைகளைச் சொன்னார்கள். அப்படியிருக்கும்பொழுது பின் தங்கிய பிரதேசங்களாக இருந்தால், அவைகளுக்கு முதலிடம் கொடுத்து, மற்ற காரணங்கள் பொருந்தாவிட்டாலும்கூட, அந்த எரியாவை பிளக்காக எடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : பல இடங்களில் பின் தங்கிய பிரதேசம் என்ற அடிப்படையில் பிளாக்குகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. ஆனால் பின்தங்கிய பிரதேசமாக இருப்பதில் அந்த

20th March 1959]

இடங்களில் மக்கள் தாங்கள் கொடுக்கவேண்டிய பகுதியை கொடுக்க முடியாமல் இருப்பதால் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. எல்லாவற்றையும் யோசித்துத்தான் ஒரு முடிவு செய்யவேண்டியிருக்கிறது.

* 916-I. *Q.* —SRI S. M. ANNAMALAI : கனம் முதலமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா :—

(அ) 1958-ல் போளூர் வட்டார சமுதாய நல திட்டத்திற்காக ஒதுக்கப் பட்ட தொகை எவ்வளவு ?

(ஆ) ஒதுக்கிய தொகையில் ஏதாவது குறைக்கப்பட்டதா ?

(இ) அப்படியாயின் காரணம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) The Budget allotment for the year 1958–59 is Rs. 3·68 lakhs.

(*b*) No reduction has been made. On the other hand the provision has been increased to Rs. 3·93 lakhs.

(*c*) Does not arise.

SRI S. M. ANNAMALAI : சென்ற ஆண்டு போளூர் சமுதாய நல திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை போதாமல், அங்குள்ள மக்கள் கடன் கேட்டதற்கு கடன் கொடுக்க முடியாத நிலைமையில் இருக்கிறது. அந்தத் தொகையை மேலும் அதிகரிக்க சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அங்கத்தினர் அவர்கள் முதலில் ஒதுக்கிய தொகையில் ஏதாவது குறைக்கப்பட்டதா என்று கேள்வி கேட்டார். குறைக்கவில்லை, ஜாஸ்தியாக்கப்பட்டது என்று பதில் சொன்னதும், 'கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை' என்பது போல், அதுபற்றி மேலும் தொகையை அதிகரிக்க முடியுமா என்று கேள்வி கேட்பதில் பிரயோசனமில்லை.

SRI T. KARIA GOUNDER : போளூர் பிளாக் 1958–59-ல் ஆரம்பிக்கப்பட்டதா ? அப்படியில்லை என்றால், எப்பொழுது ஆரம்பிக்கப் பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ? ஏற்கெனவே நடந்துவரும் பிளாக்குகளுக்கு மீண்டும் லட்சக் கணக்கில் பணத்தை சர்க்கார் ஒதுக்குகிறார்கள் என்று தெரியவருகிறது. பின் தங்கிய இடங் களில் புதியதாக பிளாக்குகள் ஆரம்பிக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது நாஷனல் எக்ஸ் டென்ஷன் பிளாக்காக 1954-ல் ஆரம்பிக்கப்பட்டது. 1—4—1957-ல் கம் யூனிடி டெவலப்மெண்டு பிளாக்காக மாற்றப்பட்டது. ஒரு பகுதியை அபிவிருத்தி வட்டாரமாக எடுத்துக்கொண்டால் அதில் இருக்கக்கூடிய திட்டங்கள் எல்லாவற்றையும் நிறைவேற்றுவதற்கு பணம் ஒதுக்கப்படுகிறது. அதனால் மற்ற பகுதிகளை எடுத்துக்கொள்ளுவது எந்த விதத்திலும் பாதிக்கப்படுவது இல்லை.

SRI A. A. RASHEED : மீசை இல்லாதவர்களுக்கு எப்படி மண் ஒட்டும் என்று கேட்க விரும்புகிறேன். (சிரிப்பு).

THE HON. SRI C. SUBRAMANIAM : விழுந்து பாருங்கள் தெரியும்.

Grant of annual increment to gazetted officers

* 916-J *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Finance Minister be pleased to state—

(*a*) whether there is any proposal before the Government to grant annual increments to those Gazetted Officers of the State who are now drawing biennial increments; and

(*b*) if so, the present stage of the proposal?